<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**<u>OS 75/2018</u>**

2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ம் நாள் Dw2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 06.08.2026

**Dw**2 (நடராஜன் )

**<u>குறுக்கு விசாரணை ( வாதிகள் தரப்பில்)</u>**

நான் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். எனக்கு பத்திரம் மற்றும் வருவாய் ஆவணங்கள் குறித்து பரிச்சயம் உண்டு. நல்லாக் கவுண்டருக்கு இரண்டு பெண் மக்கள் என்றால் சரிதான். என்னை சாட்சியம் அளிக்க வசந்தி அழைத்தார். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வசந்தியின் கணவர் நல்லசாமி எனக்கு பங்காளி என்றால் சரிதான். நல்லாக் கவுண்டர் உயில் எழுதிய காலத்தில அவருக்கு 80 வயது இருக்குமா என்றால் சுமார் 70 வயதிருக்கும். நல்லாக் கவுண்டருக்கு எழுத படிக்கத் தெரியாது, அவர் ரேகை வைக்கும் நபர் என்றால் சரிதான். எனக்கு பத்திர பதிவு நடவடிக்கைகள் தெரியுமா என்றால் தெரியும். பொதுவாக உயில் எழுதினால் அதை பதிவு செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வசந்திக்கு 1988 ல் திருமணம் நடைபெற்றது. வாதி தங்கமணிக்கு எப்போது திருமணம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. வசந்தியின் திருமணத்தில் நான் கலந்து கொண்டேன். உயில் ஆவணம் 3 கிரய ஆவணங்கள் பார்த்து அவர் சொன்னதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. அந்த 3 பத்திரங்களின் அசல் ஆவணங்களை நான் பார்த்தேன். அந்த 3 பத்திரங்களின் அசலை உயில் ஆவணம் ஏற்படுத்துமபோது நல்லாக் கவுண்டர் என்னிடம் கொடுததார். அந்த பத்திரங்கள் தற்போது வசந்தியின் பாதுகாப்பில் உள்ளதா என்றால அது பற்றி எனக்கு தெரியாது. உயில் ஆவணம் ஏற்படுத்தும்போது நான், பழனிசாமி, முத்துசாமி மற்றும் நல்லாக்கவுண்டர் ஆகியோர்கள் மட்டும் தான் இருந்தோம். வசந்தியோ அவர் கணவரோ இல்லை. உயில் ஏற்படுத்திய விவரம் வாதிக்கு தெரியாது என்றால் சரிதான். உயில் எழுதிய காலத்தில் நல்லாக் கவுண்டர் வசதியுடன் இருந்தார் என்றால அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் அவர் உயில் ஏற்படுத்த வேண்டும என்ற எண்ணத்தை

என்னிடம் சொன்னார். வசந்திக்கு சொந்தமாக காடு தோட்டம் உள்ளது என்றால வசந்தியின் கணவருக்கு உள்ளது. வசந்தி காடு தோட்டம் வைத்து வசதியுடன் தான் வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். நல்லாக் கவுண்டர் 2 மகள்கள் மீதும் பிரியமாக இருந்தார் என்றால் சரிதான். நல்லாக் கவுண்டர் பெரும்பாலும் தங்கமணியின் வீட்டில் தான் இருந்தார் என்றால அது பற்றி எனக்கு தெரியாது, நாங்கள் சென்ற போது நல்லாக்கவுண்டர் வசந்தியின் வீட்டில் இருந்தார். நல்லாக்கவுண்டர் வசந்தியின் வீட்டில் இருந்தார் என்பதற்கு வசந்தி ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் வசந்தி தான் அவரை பராமரித்து வந்தார். வசந்தியின் வீடு ஒட்டி சுப்பிரமணியின் வீடு, அதற்கு அடுத்து நல்லாக்கவுண்டர் வீடு உள்ளது என்றால் சரிதான். உயில் ஆவணம் என்னிடம் எவ்வாறு வந்தது என்றால் உயில் ஏற்படுத்திய பின் உயில் தேதியில் நல்லாக்கவுண்டர் என்னிடம் உயிலை கொடுத்திருந்தார். நான் அதை வீட்டில் வைத்திருந்து பின்பு அதை மறந்து விட்டேன். நல்லாக்கவுண்டர் என்னிடம் உயில் கொடுத்து அதை நான் வீட்டில் வைத்திருந்து மறந்து விட்டேன் என்று வசந்தியிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அவ்வாறு 2025 ல் நான் வசந்தியிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. அதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு சொன்னேன். நல்லாக்கவுண்டரின் மனைவி 26.01.1995 ல் இறந்தார். என் தாயார் 1.8.2010 ல் இறந்தார். நல்லாக்கவுண்டரின் மனைவியின் இறப்பு சான்று பெறுவதற்கு நான் உதவி செய்தேனா என்றால் இல்லை. தங்கமணி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வசந்தி என்ன எதிர்வாதம் செய்கிறார் என்றால் தனக்கு உயில் படி சொத்து பாத்தியம் என கட்சி செய்கிறார். பிரதிவாதி 2023 ல் அவ்வாறு எதிர்வழக்குரை தாக்கல் செய்தாரா என்றால் இல்லை. வசந்தி என்னை பார்க்க வந்தபோது தான் நான் 2023 ல் உயில் பற்றிய விவரத்தை அவரிடம் சொன்னேன். 2023 ம் ஆண்டு வரை வசந்திக்கு உயில் உள்ளது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். நான் சொல்லும் வரை அவருக்கு தெரியாது. நான் சுள்ளிபாளையத்தில் நிரந்தரமாக குடியிருந்து வருகிறேன். வசந்தி எங்கு குடியுள்ளார் என்றால் கோடாபுலியூர் வீரசங்கிலி கிராமத்தில் குடியுள்ளார். உயில் ஏற்படுத்திய காலத்தில் நல்லாக்கவுண்டர் வீட்டின் கதவு எண் சொல்லவில்லை. வசந்தி எந்த கதவு எண்ணில் உள்ளார் என்ற விவரமும் உயிலில் சொல்லவில்லை என்றால் சரிதான். நல்லாக்கவுண்டர் வசம் இருந்த 3 அசல் ஆவணங்களில் உள்ள

சொத்துக்கள் பொதுவில் உள்ள சொத்துக்கள் என்றால சரிதான். பொதுவில் உள்ள சொத்தை பொறுத்து செக்குபந்தி போடவேண்டாம் என நான் சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை. பொதுவில் உள்ள சொத்தை பொறுத்து செக்குபந்தி கண்டு ஆவணம் எழுதினார் அது தவறான ஆவணம் என்றால் சரிதான். மேற்படி 3 அசல் ஆவணங்களில் உள்ள சொத்தும உயிலில் உள்ள சொத்தும் ஒரே சொத்தா என்றால் 30 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டதால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. நான் நீதிமன்றத்திற்கு வருவதற்கு முன்பு வசந்தியிடம் மேற்படி 3 ஆவண்ங்களை பெற்று பார்த்தேனா என்றால் இல்லை. நல்லாக்கவுண்டர் எனக்கு சொந்தமில்லை என்றால் சரிதான். உயில் எங்கு வைத்து எழுதப்பட்டது என்ற விவரத்தை நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் நல்லாக்கவுண்டர் வீட்டில் வைத்து தான் எழுதப்பட்டது. நல்லாக்கவுண்டர் வீட்டில் வைத்து தான் உயில் எழுதப்பட்டதாக நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. உயில் எழுதிய ஆவணத்தில் நல்லாக்கவுண்டர் அவரது வீட்டில் தான் கையொப்பம் செய்தார். உயில் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் இல்லை. 1995 ம் ஆண்டு கணிணி உபயோகம் வந்து விட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சொத்திற்குண்டான பதிவு அலுவலகம் திங்களூர் என்றால் சரிதான். பெருந்துறை அக்ரஉறார வீதியில் சார் பதிவாளர் அலுவலகம் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியம். உயில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. உயில் ஆவணத்தை தட்டச்சு செய்துவிட்டு வந்து கையொப்பம் பெறப்பட்டது. தட்டச்சு எங்கு செய்யப்பட்டது என்றால பழனிசாமி சென்று தான் தட்டச்சு செய்து வந்தார். எங்கு செய்யப்பட்டது என தெரியாது. உயிலை பார்த்தால் எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால சாட்சியிடம் உயில் ஆவணத்தை காண்பித்தபோது அவர் அதை பார்வையிட்டு அது பெருந்துறை 143, அக்ரஉாறர வீதி கே வி சத்யா என்பவரால் சீத்தாராம் தட்டச்சு பயிலகத்தில் தட்டச்சு செய்யப்பட்டதாக கண்டுள்ளது என கூறுகிறார். கே வி சத்யாவிடம் தட்டச்சு செய்வதற்கு பழனிசாமி மட்டும் தான் சென்றார் என்றால் சரிதான். பழனிசாமி சொல்ல சொல்ல கே வி சத்யா தட்டச்சு செய்தாரா என்றால அது பற்றி பழனிசாமி மற்றும் சத்யாவை கேட்டால் தான் தெரியும் எனக்கு தெரியாது. பிசாஆ 1 உயில் ஆவணத்தில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்துக்களுக்கு மேலாக கைரேகை (முதல் பக்கத்தில்) வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழனிசாமி ஆவண எழுத்தரா

என்றால் இல்லை. பழனிசாமி சுள்ளிபாளையததை சேர்ந்தவர் என்றால சரிதான். பழனிசாமி எனக்கு என்ன உறவு முறை என்றால் அண்ணன் உறவு முறை. அண்ணன் பழனிசாமி நல்லா கவுண்டர் சொல்ல சொல்ல எழுதிக் கொண்டாரா என்றால் ஆமாம். நல்லா கவுண்டர் சொல்ல சொல்ல அவர் எழுதிக் கொண்டு பின் தட்டச்சு அலுவலகம் சென்று தட்டச்சு செய்து எடுதது வந்ததாக கூறுகிறார். தட்டச்சு செய்த சத்யாவிற்கு நல்லாக்கவுண்டர், நடராஜன் ஆகியோர்களை தெரியாது என்றால் சரிதான். பழனிசாமி சத்யாவிடம் உயில் ஆவணத்தை தட்டச்சு செய்து அப்போதே சத்யாவிடம் கையொப்பம் பெற்று வந்துவிட்டார் என்றால் சரிதான். சீத்தாராம் தட்டச்சு பயிலகத்திற்கும் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சுமார் 500 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். பழனிசாமி அவரது பெயர் , தபெ ஆகியவற்றை தட்டச்சு அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டாரா என்றால் அவர் கையொப்பம் செய்ததை நான் பார்க்கவில்லை. உயிலில் முதலில் முத்துசாமியும் பிறகு நடராஜனும் கையொப்பம் செய்தனர். அதன்பின் நல்லாகவுண்டர் ரேகை வைத்தார் என்றால சரியல்ல. நல்லா கவுண்டர் ரேகை வைத்த பின் தான் நாங்கள் கையொப்பம செய்தோம் என சாட்சி கூறுகிறார். நல்லாக்கவுண்டருக்கு அடிக்கடி உடல்நிலை பிரச்சினை ஏற்பட்டு தங்கமணி தான் அவர் மருத்துவமனைக்கு அழைத்து செல்வார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நல்லாக்கவுண்டர் அதிக நாட்கள் உயிருடன் இருக்கமாட்டார் என்பதால் தான் உயில் எழுதப்பட்டதா என்றால் நல்லாக்கவுண்டர் உயில் எழுத வேண்டும் என அழைத்ததால் நாங்கள் சென்றதாக கூறுகிறார். பழனிசாமி எத்தனை ஆவணங்கள் தயார் செய்துள்ளார் , அவருக்கு ஆவணங்கள எழுதுவதில் எவ்வளவு பரிச்சயம் போன்ற விவரம் எனக்கு தெரியாது. நல்லாக்கவுண்டர் எங்கு வரச்சொன்னார், உயில் எங்கு தயாா செய்யப்பட்டது என்று நிருபணம் செய்யவில்லை என்றால சரியல்ல. யார் யார் உடனிருந்தனர் என்பதையும் நான் நிருபணம் செய்யவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக ஆவணங்களில் எழுத்துக்களுக்கு பின் தான் ரேகை மற்றும் கையொப்பம் செய்வாகள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் உயில் ஆவணத்தில் எழுத்துக்களுக்கு மேல் தான் ரேகை வைக்கப்பட்டுள்ளது. நான் பார்த்த 3 ஆவணங்களில் இருந்த சொத்து நீங்கலாக நல்லாக்கவுண்டருக்கு வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உயில் ஆவணத்தில் சொத்து விவரத்தில் உள்ள சொத்துக்கள்

தவிர வேறு எனது விடுபட்ட சொத்துக்களும் இந்த உயில் சாசனத்திற்கு கட்டுப்பட்டது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு நபர் தனது சொத்துக்களை தெரிந்து கொள்ளாமல் உயில் ஏற்படுத்தமாட்டார் என்றால சாட்சி தானாக முன்வந்து நல்லாக்கவுண்டர் வாங்கிய சொத்துக்களை பொறுத்து உயில் எழுதுவதாக என்னிடம் சொன்னார் என கூறிகிறார். நான் வசந்தியிடம் நான் பார்த்ததாக சொல்லும் 3 ஆவணங்களின் அசல் ஆவணம் உள்ளதா என நான் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. பழனிசாமி எழுதியதை பார்த்தால் அவர் எழுதிய விவரத்திற்கும் உயில் ஆவணத்திற்கும் முரண்பாடு உள்ளதா என்பதை தெரிந்து கொள்ள முடியும் என்றால் சரிதான். பழனிசாமி எழுதிய விவரம் வேறு என்றும், உயிலில் கண்டுள்ள விவரம் வேறு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நல்லாக்கவுண்டருக்கு தங்கமணி மீது தான் அதிக பிரியம் என்றும் அவர் உயில் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வசந்தியிடம் வழக்குரை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கில் உள்ள சொத்து விவரமும் உயிலில் உள்ள சொத்து விவரமும் மாறுபட்டுள்ளது என்றால சரியல்ல. நான் கிராம நிர்வாக அலுவலராக இருந்ததால் ஆவணங்கள் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியும் என்பதால் பிசாஆ 1 தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் பொய்யான உயில் ஆவணத்தை ஏற்பாடு செய்து நான் பிரதிவாதிக்கு உதவி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் பொய் சாட்சியம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.08.06 16:12:10 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS